# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

| | | | |
|---|---|---|---|
| வழக்கு | : OS.230/2024 | கிராமம் | : சாத்தம்பாடி |
| சாட்சி | : வா.சா–1 | வட்டம் | : உடையார்பாளையம் |
| பெயர் | : வளர்மதி | வயது | : 62 |
| க/பெ | : செல்லக்கண்ணு | தொழில் | : வீட்டுகுடித்தனம் |

2026–ம் ஆண்டு ஜுலை 06–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

## முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதியின் காப்பாளர் மற்றும் வாதியின் தாய் வழி பாட்டி ஆவேன். வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட விவரங்களை நான் படித்துப்பார்த்து சரி என்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டு நான் என்னுடைய கையொப்பங்களை இட்டேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன்.

1. 08.07.2016 தேதியிட்ட எனது மகள் யோகராணி பெயரில் உள்ள கிரயப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1.
2. 11.02.2021 தேதியிட்ட தாவா சொத்துக்கான கணிணி பட்டா வா.சா.ஆ.2.
3. 26.06.2020 தேதியிட்ட எனது மகளின் இறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.3.
4. 17.07.2020 தேதியிட்ட எனது மகளின் வாரிசு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.4.
5. 05.04.2016 தேதியிட்ட எனது கணவர் பெயரில் உள்ள பதிவில்லாத கிரய ஒப்பந்தம் வா.சா.ஆ.5.

6. 18.03.2021 தேதியிட்ட 1ம் பிரதிவாதி எனக்கும் எனது கணவர் மற்றும் எனது மகனுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6.

7. 24.03.2021 தேதியிட்ட நாங்கள் எங்களது வழக்கறிஞர் மூலம் 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.7.

8. 1ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி வாதிக்கு காப்பாளராக இருந்து தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.135/2022 பிராதின் நகல் வா.சா.ஆ.8.

9. அசல் வழக்கு எண்.135/2022–ல் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் நகல் வா.சா.ஆ.9.

10. அசல் வழக்கு எண்.135/2022–ல் கடந்த 15.02.2024ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.